


श्रीमत् वेदान्त रामानुज मुनि करुणालब्ध वेदान्त युग्मम्
श्रीमत् श्रीवास योगीश्वर गुरुपदयोर्पित स्वात्मभारम्
श्रीमत् श्रीरङ्गनाताह्वय मुनिकृपया प्राप्त मोक्षाश्रमं तं
श्रीमत् वेदान्त रामनुज मुनिमपरम् संश्रये देशिकेन्द्रम्



श्रीमत् श्रीवास योगीश्वर मुनि करुणालब्ध वेदान्त युग्मम्
श्रीमत् वेदान्त रामानुज गुरुपदयोर्पित स्वात्मभारम्
श्रीमत् श्रुत्यन्त रामानुज यति नृपतेः प्राप्त मोक्षाश्रमं तं
श्रीमत् श्रीवास रामनुजमुनिं संश्रये ज्ञानवार्धिम्



वेदान्त लक्ष्मण मुनीन्द्र कृपात्त बोधम्
तत्पाद युग्म सरसीरुह भृङ्गराजम्
त्रय्यन्त युग्म कृतभूरि परिश्रमं तं
श्रीरङ्ग लक्ष्मणमुनिम् शरणं प्रपद्ये

# திருமாலை

*thirumAlai*

# திருமாலை

தனியன்

### ஸ்ரீ திருமலை ஆண்டான் அருளிச்செய்த

तमेव मत्वा परवासुदेवं - रङ्गेशयं राजवदर्हणीयं ।
प्राबोधकीम् योकृत सूक्तिमालां - भक्ताङ्घ्रिरेणुं भगवन्तमीडे ॥

### ஸ்ரீ திருவரங்கப்பெருமாள் அரையர் அருளிச்செய்த

மற்றொன்றும் வேண்டா மனமே மதிள் அரங்கர்
கற்றினம் மேய்த்த கழலிணைக்கீழ்
உற்ற திருமாலை பாடும் சீர்த் தொண்டரடிப்பொடி எம் பெருமானை
எப்பொழுதும் பேசு

### ஸ்ரீ தொண்டரடிப்பொடி ஆழ்வார் அருளிச்செய்த

*காவலிற் புலனை வைத்துக்*
*கலிதன்னைக் கடக்கப் பாய்ந்து*
*நாவலிட்டு உழிதருகின்றோம்*
*நமன் தமர் தலைகள் மீதே*
*மூவுலகு உண்டு உமிழ்ந்த*
*முதல்வ நின் நாமம் கற்ற*
*ஆவலிப் புடைமை கண்டாய்*
*அரங்க மா நகருளானே* [1] [0872]

*பச்சை மா மலை போல் மேனி*
*பவளவாய் கமலச் செங்கண்*
*அச்சுதா அமரரேறே*
*ஆயர் தம் கொழுந்தே என்னும்*
*இச்சுவை தவிர யான் போய்*
*இந்திர லோகம் ஆளும்*
*அச்சுவை பெறினும் வேண்டேன்*
*அரங்க மா நகருளானே* [2] [0873]

# திருமாலை

வேத நூல் பிராயம் நூறு
மனிசர் தாம் புகுவரேலும்
பாதியும் உறங்கிப் போகும்
நின்றதில் பதினையாண்டு
பேதை பாலகன் அது ஆகும்
பிணி பசி மூப்புத் துன்பம்
ஆதலால் பிறவி வேண்டேன்
அரங்க மா நகருளானே [3] [0874]

மொய்த்த வல் வினையுள் நின்று
மூன்று எழுத்து உடைய பேரால்
கத்திர பந்தும் அன்றே
பராங்கதி கண்டு கொண்டான்
இத்தனை அடியர் ஆனார்க்கு
இரங்கும் நம் அரங்கனாய
பித்தனைப் பெற்றும் அந்தோ
பிறவியுள் பிணங்குமாறே [4] [0875]

பெண்டிரால் சுகங்கள் உய்ப்பான்
பெரியதோர் இடும்பை பூண்டு
உண்டிராக் கிடக்கும் போது
உடலுக்கே கரைந்து நைந்து
தண் துழாய் மாலை மார்பன்
தமர்களாய்ப் பாடி ஆடி
தொண்டு பூண்டு அமுதம் உண்ணாத்
தொழும்பர் சோறு உகக்குமாறே [5] [0876]

மறம்சுவர் மதில் எடுத்து
மறுமைக்கே வெறுமை பூண்டு
புறம்சுவர் ஓட்டை மாடம்
புரளும் போதறிய மாட்டீர்
அறம்சுவர் ஆகி நின்ற
அரங்கனார்க்கு ஆட் செய்யாதே
புறம்சுவர் கோலஞ்செய்து
புள் கௌவக் கிடக்கின்றீரே [6] [0877]

# திருமாலை

புலை அறம் ஆகி நின்ற
புத்தொடு சமணம் எல்லாம்
கலை அறக் கற்ற மாந்தர்
காண்பரோ கேட்பரோ தாம்
தலை அறுப்பு உண்டும் சாவேன்
சத்தியம் காண்மின் ஐயா
சிலையினால் இலங்கை செற்ற
தேவனே தேவன் ஆவான் [7] [0878]

வெறுப்பொடு சமணர் முண்டர்
விதி இல் சாக்கியர்கள்
நின்பால் பொறுப்பு அரியனகள் பேசில்
போவதே நோயது ஆகி
குறிப்பு எனக்கு அடையும் ஆகில்
கூடுமேல் தலையை ஆங்கே
அறுப்பதே கருமம் கண்டாய்
அரங்க மா நகருளானே [8] [0879]

மற்றும் ஓர் தெய்வம் உண்டே
மதி இலா மானிடங்காள்
உற்றபோது அன்றி நீங்கள்
ஒருவன் என்று உணர மாட்டீர்
அற்றமேல் ஒன்று அறீயீர்
அவன் அல்லால் தெய்வம் இல்லை
கற்றினம் மேய்த்த எந்தை
கழலிணை பணிமின் நீரே [9] [0880]

நாட்டினான் தெய்வம் எங்கும்
நல்லதோர் அருள் தன்னாலே
காட்டினான் திருவரங்கம்
உய்பவர்க்கு உய்யும் வண்ணம்
கேட்டிரே நம்பிமீர்காள்
கெருட வாகனனும் நிற்க
சேட்டைதன் மடியகத்துச்
செல்வம் பார்த்து இருக்கின்றீரே [10] [0881]

# திருமாலை

ஒரு வில்லால் ஓங்கு முந்நீர் அனைத்து
உலகங்கள் உய்ய
செருவிலே அரக்கர் கோனைச்
செற்ற நம் சேவகனார்
மருவிய பெரிய கோயில்
மதில் திருவரங்கம் என்னா
கருவிலே திரு இலாதீர்
காலத்தைக் கழிக்கின்றீரே [11] [0882]

நமனும் முற்கலனும் பேச
நரகில் நின்றார்கள் கேட்க
நரகமே சுவர்க்கம் ஆகும்
நாமங்கள் உடைய நம்பி
அவனதூர் அரங்கம் என்னாது
அயர்த்து வீழ்ந்தளிய மாந்தர்
கவலையுள் படுகின்றார் என்று
அதனுக்கே கவல்கின்றேனே [12] [0883]

எறியும் நீர் வெறிகொள் வேலை
மாநிலத்து உயிர்கள் எல்லாம்
வெறிகொள் பூந் துளவ மாலை
விண்ணவர் கோனை ஏத்த
அறிவிலா மனிசர் எல்லாம்
அரங்கம் என்று அழைப்பராகில்
பொறியில் வாழ் நரகம் எல்லாம்
புல் எழுந்தொழியும் அன்றே [13] [0884]

***வண்டினம் முரலும் சோலை***
***மயிலினம் ஆலும் சோலை***
***கொண்டல் மீதணவும் சோலை***
***குயிலினம் கூவும் சோலை***
***அண்டர்கோன் அமரும் சோலை***
***அணி திருவரங்கம் என்னா***
***மிண்டர்பாய்ந்து உண்ணும் சோற்றை விலக்க***
***நாய்க்கு இடுமின் நீரே*** [14] [0885]

# திருமாலை

மெய்யர்க்கே மெய்யன் ஆகும்
விதி இலா என்னைப் போல
பொய்யர்க்கே பொய்யன் ஆகும்
புட்கொடி உடைய கோமான்
உய்யப்போம் உணர்வினார்கட்கு
ஒருவன் என்று உணர்ந்த பின்னை
ஐயப்பாடு அறுத்துத் தோன்றும்
அழகன் ஊர் அரங்கம் அன்றே [15] [0886]

சூதனாய்க் கள்வனாகித்
தூர்த்தரோடு இசைந்த காலம்
மாதரார் கயற்கண் என்னும்
வலையுள் பட்டு அழுந்துவேனை
போதரே என்று சொல்லிப்
புந்தியுல் புகுந்து
தன்பால் ஆதரம் பெருக வைத்த
அழகன் ஊர் அரங்கம் அன்றே [16] [0887]

விரும்பி நின்றேத்த மாட்டேன்
விதி இலேன் மதி ஒன்றில்லை
இரும்பு போல் வலிய நெஞ்சம்
இறை இறை உருகும் வண்ணம்
சுரும்பமர் சோலை சூழ்ந்த
அரங்க மா கோயில் கொண்ட
கரும்பினைக் கண்டு கொண்டு
என் கண்ணிணை களிக்குமாறே [17] [0888]

இனி திரைத் திவலை மோத
எறியும் தண் பரவை மீதே
தனி கிடந்து அரசு செய்யும்
தாமரைக் கண்ணன் எம்மான்
கனி இருந்தனைய செவ்வாய்க்
கண்ணனைக் கண்ட கண்கள்
பனி அரும்பு உதிருமாலோ
என் செய்கேன் பாவி யேனே [18] [0889]

# திருமாலை

*குடதிசை முடியை வைத்துக்*
*குணதிசை பாதம் நீட்டி*
*வட திசை பின்பு காட்டித்*
*தென் திசை இலங்கை நோக்கி*
*கடல் நிறக் கடவுள் எந்தை*
*அரவணைத் துயிலுமா கண்டு*
*உடல் எனக்கு உருகுமாலோ*
*என் செய்கேன் உலகத்தீரே* [19] [0890]

பாயும் நீர் அரங்கந் தன்னுள்
பாம்பணைப் பள்ளி கொண்ட
மாயனார் திரு நன் மார்பும்
மரகத உருவும் தோளும்
தூய தாமரைக் கண்களும்
துவர் இதழ் பவள வாயும்
ஆய சீர் முடியும் தேசும்
அடியரோர்க்கு அகலல் ஆமே [20] [0891]

பணிவினால் மனம தொன்றிப்
பவள வாய் அரங்கனார்க்கு
துணிவினால் வாழ மாட்டாத்
தொல்லை நெஞ்சே நீ சொல்லாய்
அணியனார் செம்பொன் ஆய
அருவரை அனைய கோயில்
மணியனார் கிடந்த வாற்றை
மனத்தினால் நினைக்கலாமே [21] [0892]

பேசிற்றே பேசல் அல்லால்
பெருமை ஒன்று உணரல் ஆகாது
ஆசற்றார் தங்கட்கு அல்லால்
அறியல் ஆவானும் அல்லன்
மாசற்றார் மனத்துளானை
வணங்கி நாம் இருப்பது அல்லால்
பேசத்தான் ஆவது உண்டோ
பேதை நெஞ்சே நீ சொல்லாய் [22] [0893]

# திருமாலை

கங்கயில் புனிதம் ஆய
காவிரி நடுவு பாட்டு
பொங்குநீர் பரந்து பாயும்
பூம்பொழில் அரங்கந் தன்னுள்
எங்கள் மால் இறைவன் ஈசன்
கிடந்தோர் கிடக்கை கண்டும்
எங்ஙனம் மறந்து வாழ்கேன்
ஏழையேன் ஏழையேனே [23] [0894]

வெள்ள நீர் பரந்து பாயும்
விரி பொழில் அரங்கந் தன்னுள்
கள்வனார் கிடந்த வாறும்
கமல நன் முகமும் கண்டும்
உள்ளமே வலியை போலும்
ஒருவன் என்று உணர மாட்டாய்
கள்ளமே காதல் செய்து
உன் கள்ளத்தே கழிக்கின்றாயே [24] [0895]

குளித்து மூன்று அனலை ஓம்பும்
குறிகொள் அந்தணமை தன்னை
ஒளித்திட்டேன் என் கண் இல்லை
நின் கணும் பத்தன் அல்லேன்
களிப்பதென் கொண்டு நம்பீ
கடல்வண்ணா கதறுகின்றேன்
அளித்து எனக்கு அருள் செய் கண்டாய்
அரங்க மா நகருளானே [25] [0896]

போதெல்லாம் போது கொண்டு
உன் பொன்னடி புனைய மாட்டேன்
தீதிலா மொழிகள் கொண்டு
உன் திருக்குணம் செப்ப மாட்டேன்
காதலால் நெஞ்சம் அன்பு
கலந்திலேன் அது தன்னாலே
ஏதிலேன் அரங்கர்க்கு எல்லே
என் செய்வான் தோன்றினேனே [26] [0897]

# திருமாலை

குரங்குகள் மலையை நூக்கக்
    குளித்துத் தாம் புரண்டிட்டு ஓடி
தரங்க நீர் அடைக்கல் உற்ற
    சலம் இலா அணிலும் போலேன்
மரங்கள் போல் வலிய நெஞ்ச
    வஞ்சனேன் நெஞ்சு தன்னால்
அரங்கனார்க்கு ஆட் செய்யாதே
    அளியத்தேன் அயர்க்கின்றேனே [27] [0898]

உம்பரால் அறியல் ஆகா
    ஒளியுளார் ஆனைக்காகி
செம் புலால் உண்டு வாழும்
    முதலை மேல் சீறி வந்தார்
நம் பரம் ஆயது உண்டே
    நாய்களோம் சிறுமை ஓரா
எம்பிராற்கு ஆட் செய்யாதே
    என் செய்வான் தோன்றினேனே [28] [0899]

ஊரிலேன் காணி இல்லை
    உறவு மற்றொருவர் இல்லை
பாரில் நின் பாத மூலம்
    பற்றிலேன் பரம மூர்த்தி
காரொளி வண்ணனே என்
    கண்ணனே கதறுகின்றேன்
ஆர் உளர் களைகண் அம்மா
    அரங்க மா நகருளானே [29] [0900]

மனத்தில் ஓர் தூய்மை இல்லை
    வாயில் ஓர் இன்சொல் இல்லை
சினத்தினால் செற்றம் நோக்கித்
    தீவிளி விளிவன் வாளா
புனத்துழாய் மாலையானே
    பொன்னி சூழ் திருவரங்கா
எனக்கினிக் கதி என் சொல்லாய்
    என்னை ஆளுடைய கோவே [30] [0901]

# திருமாலை

தவத்துளார் தம்மில் அல்லேன்
தனம் படத்தாரில் அல்லேன்
உவர்த்த நீர் போல
என் தன் உற்றவர்க்கு ஒன்றும் அல்லேன்
துவர்த்த செவ்வாயினார்க்கே
துவக்கு அறத் துரிசன் ஆனேன்
அவத்தமே பிறவி தந்தாய்
அரங்க மா நகருளானே [31] [0902]

ஆர்த்து வண்டு அலம்பும் சோலை
அணி திருவரங்கந் தன்னுள்
கார்த் திரள் அனைய மேனிக்
கண்ணனே உன்னைக் காணும்
மார்க்கம் ஒன்றறிய மாட்டா
மனிசரில் துரிசனாய
மூர்க்கனேன் வந்து நின்றேன்
மூர்க்கனேன் மூர்க்கனேனே [32] [0903]

மெய் எல்லாம் போக விட்டு
விரிகுழலாரில் பட்டு
பொய் எல்லாம் பொதிந்து கொண்ட
போழ்க்கனேன் வந்து நின்றேன்
ஐயனே அரங்கனே
உன் அருள் என்னும் ஆசை தன்னால்
பொய்யனேன் வந்து நின்றேன்
பொய்யனேன் பொய்யனேனே [33] [0904]

உள்ளத்தே உறையும் மாலை
உள்ளுவான் உணர்வு ஒன்று இல்லா
கள்ளத்தேன் நானும் தொண்டாய்த்
தொண்டுக்கே கோலம் பூண்டு
உள்ளுவார் உள்ளிற்று எல்லாம்
உடன் இருந்து அறிதி என்று
வெள்கிப்போய் என்னுள்ளே நான்
விலவு அறச் சிரித்திட்டேனே [34] [0905]

# திருமாலை

தாவி அன்று உலகம் எல்லாம்
        தலைவிளாக்கொண்ட எந்தாய்
சேவியேன் உன்னை அல்லால்
        சிக்கெனச் செங்கண் மாலே
ஆவியே அமுதே
        என் தன் ஆருயிர் அனைய எந்தாய்
பாவியேன் உன்னை அல்லால்
        பாவியேன் பாவியேனே [35] [0906]

மழைக்கு அன்று வரை முன் ஏந்தும்
        மைந்தனே மதுர ஆறே
உழைக் கன்றே போல
        நோக்கம் உடையவர் வலையுள் பட்டு
உழைக்கின்றேற்கு
        என்னை நோக்காது ஒழிவதே
உன்னை அன்றே அழைக்கின்றேன் ஆதி மூர்த்தி
        அரங்க மா நகருளானே [36] [0907]

தெளிவிலாக் கலங்கல் நீர் சூழ்
        திருவரங்கத்துள் ஓங்கும்
ஒளியுளார் தாமே யன்றே
        தந்தையும் தாயும் ஆவார்
எளியதோர் அருளும் அன்றே
        என் திறத்து எம்பிரானார்
அளியன் நம் பையல் என்னார்
        அம்மவோ கொடியவாறே [37] [0908]

***மேம் பொருள் போக விட்டு***
        ***மெய்ம்மையை மிக உணர்ந்து***
***ஆம் பரிசு அறிந்து கொண்டு***
        ***ஐம்புலன் அகத்து அடக்கி***
***காம்பு அறத் தலை சிரைத்து***
        ***உன் கடைத்தலை இருந்து வாழும்***
***சோம்பரை உகத்தி போலும்***
        ***சூழ் புனல் அரங்கத்தானே*** [38] [0909]

# திருமாலை

அடிமையில் குடிமை இல்லா
அயல் சதுப்பேதி மாரில்
குடிமையில் கடைமை பட்ட
குக்கரில் பிறப்பரேலும்
முடியினில் துளபம் வைத்தாய்
மொய்கழற்கு அன்பு செய்யும்
அடியரை உகத்தி போலும்
அரங்க மா நகருளானே [39] [0910]

திருமறுமார்வ நின்னைச்
சிந்தையுள் திகழ வைத்து
மருவிய மனத்தர் ஆகில்
மா நிலத்துயிர்கள் எல்லாம்
வெருவு உறக் கொன்று சுட்டிட்டு
ஈட்டிய வினையரேலும்
அருவினைப் பயன துய்யார்
அரங்க மா நகருளானே [40] [0911]

வானுளார் அறியல் ஆகா
வானவா என்பர் ஆகில்
தேனுலாம் துளப மாலைச்
சென்னியாய் என்பர் ஆகில்
ஊனம் ஆயினகள் செய்யும்
ஊனகாரகர்களேலும்
போனகம் செய்த சேடம்
தருவரேல் புனிதம் அன்றே [41] [0912]

பழுதிலா ஒழுகல் ஆற்றுப்
பல சதுப்பேதிமார்கள்
இழிகுலத்தவர்களேலும்
எம் அடியார்கள் ஆகில்
தொழுமினீர் கொடுமின் கொள்மின்
என்று நின்னோடும் ஒக்க
வழிபட அருளினாய் போல்
மதிள் திருவரங்கத்தானே [42] [0913]

# திருமாலை

அமர ஓர் அங்கம் ஆறும்
　　வேதம் ஓர் நான்கும் ஓதி
தமர்களில் தலைவராய
　　சாதி அந்தணர்களேலும்
நுமர்களைப் பழிப்பர் ஆகில்
　　நொடிப்பதோர் அளவில்
ஆங்கே அவர்கள் தாம் புலையர் போலும்
　　அரங்க மா நகருளானே [43] [0914]

*பெண் உலாம் சடையினானும்*
　　*பிரமனும் உன்னைக் காண்பான்*
*எண் இலா ஊழி ஊழி*
　　*தவம் செய்தார் வெள்கி நிற்ப*
*விண் உளார் வியப்ப வந்து*
　　*ஆனைக்கு அன்று அருளை ஈந்த கண்ணறா*
*உன்னை என்னோ*
　　*களைகணாக் கருதுமாறே* [44] [0915]

*வளவெழும் தவள மாட*
　　*மதுரை மா நகரந் தன்னுள்*
*கவளமால் யானை கொன்ற*
　　*கண்ணனை அரங்க மாலை*
*துலவத் தொண்டாய தொல் சீர்த்*
　　*தொண்டரடிப்பொடி சொல்*
*இளைய புன் கவிதையேலும்*
　　*எம்பிறார்கு இனியவாறே* [45] [0916]